# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி - 2 | திபி. 2015 | சிலை 8 (23-12-84) | 65 காசுகள் | இதழ் எண் : 50 | பகுதி 51-52


## தேர்தல் முறையில் திருத்தமும் பாதுகாப்பும் வேண்டும்!

# எதிர்காலத்தில் வன்முறைகள் மிகும்; கள்ள ஒப்போலைகளும் கூடும்!

### வேட்பாளர் பற்றிய விளக்கங்களை அரசே வெளிப்படுத்துதல் வேண்டும்!

### தனியார் விளம்பரங்கள், கருத்துப் பரப்புதல்கள் தடுத்து நிறுத்தப்படுதலே தக்கது.

### படங்களுடன் கூடிய ஒப்பாளர் அடையாள அட்டை தேவை!

### தேர்தல் பற்றிய தெளிவான நடைமுறைகள் வரையறுக்கப்படுதல் நல்லது.

## பாவலரேறு அறிக்கை!

சென்ற தேர்தல்களை விட இந்தத் தேர்தல் சில அடிப்படைகளில் மாறுபட்டது. தேர்தல் நடத்தத் திட்டமிட்ட தலைமையமைச்சர் இந்திரா காந்தியும், தமிழக முதலமைச்சரும் நாட்டில் இல்லாத நிலையில் இத் தேர்தல் நடத்தப் பெறுவது ஒரு புதுமையாகும். ஒருவர் மறைவுற்றார்; ஒருவர் அயல்நாட்டில் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் உள்ளார். இவர்கள் இருவரும் இல்லாத நிலை, ஆளுங்கட்சிகளுக்கும் சரி, எதிர்க்கட்சிகளுக்கும் சரி, சில நல்ல வாய்ப்புகளை உருவாக்கித் தந்திருக்கின்றன என்றே சொல்ல வேண்டும். தேர்தல் நடைமுறைகளும், தேர்தல் முடிவும் எவ்வாறிருப்பினும், இந்தத் தேர்தல் ஒருவகையில் நேர்மையானதாகக் கருத முடியவில்லை. தொடக்கத்திலேயே பல குழப்பங்கள், குழறுபடிகள். இவை தேர்தலுக்குப் பின்னும் தொடரும் என்பதில் ஐயமில்லை. அந்நிலை வழக்கத்துக்கு மாறானதாகவே இருக்கலாம். அதுபற்றிப் பின்னர்தாம் கருத்துத் தெரிவிக்க இடலும்.

ஆனால், இன்றைய நிலையில், இப்பொழுதுள்ள தேர்தல் முறை அறிவுக்கும் பொருந்துவதாக இல்லை; அறிவியலுக்கும் பொருந்துவதாக இல்லை. தேர்தல் என்பதே மக்களின் உரிமைகளைப் பயன்படுத்திக் கொள்ளும் ஒரு குடியாட்சி நடைமுறை. நாட்டில் நடைபெறுவது குடியாட்சியா, அல்லது முடியாட்சியா என்பதை விளங்கிக்கொள்ள தேர்தல் ஒன்றுதான் அளவு கருவியாக உள்ளது. இத் தேர்தல் முறையும் இல்லையானால், இப்பொழுது நடந்துவருவது எந்த ஆட்சி என்றே பலருக்கும் விளங்காது. ஆட்சி முறையில் அந்த அளவுக்கு வேறுபாடு காணமுடியவில்லை. இந்நிலையில் தேர்தல் ஒன்றுதான் நாம் குடியரசாட்சியில் உள்ளோம் என்பதை ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை வந்து நினைவூட்டிக் கொண்டு இருக்கிறது. இந்த ஒரு பயனுக்காகவாகிலும் நாம் தேர்தலை வரவேற்க வேண்டும். தேர்தல் இல்லாத ஒரு நிலையை நாம் விளங்கிக் கொள்ள வேண்டுமானால், அண்மையிலுள்ள பாக்கித்தானை நினைத்துக் கொண்டால் போதும். தேர்தல் எவ்வளவு இன்றியமையாதது என்று நமக்கு விளங்கி விடும்.

இனி, குடியரசமைப்புக்கே இவ்வளவு முகாமை வாய்ந்த தேர்தல், இப்பொழுது சரியான முறையில் நடைபெறுகிறதா? இதுபற்றிச் சென்ற இதழிலேயே சில கருத்துகளை வெளியிட்டிருந்தோம். அவற்றை மேலும் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். சுருக்கமாகச் சொல்வதானால், இப்பொழுதுள்ள தேர்தல் முறை பணம் படைத்தவர்களே ஆட்சியில் அமர வாய்ப்பளிக்கிறது. உயர் சாதியினரே அதிகாரங்களைப்பெற இடந்தருகிறது. அதுவும் ஆட்சியில் உள்ளவர்களுக்கே மிகுந்த சலுகைகள் உள்ளன. தலைமையமைச்சர் மட்டுந்தான் அரசு விளம்பர ஊர்திகளைப் பயன்படுத்தலாம் என்னும் முறையே குடியரசமைப்பை எடுத்தெறிகிற இகழ்ந்து தள்ளுகிற நடைமுறைக்கு ஒரு வெளிப்படையான சான்றாகும். அதுவுமன்றிச் செய்தித்தாள்களில் ஒரு முழுப் பக்கம், இரண்டு முழுப்பக்கம் என்ற அளவில் அடிக்கடி விளம்பரம் கொடுக்க பணம்படைத்த கட்சிகளால் தாமே இயல்கிறது. இதை, விளங்கும்படி ஓர் எடுத்துக்காட்டுடன் சொல்வதானால், அரிமா, யானை, புலி, குதிரை, மாடு, ஆடு என்னும் இவற்றுடன் பூனை, எலி, பிள்ளைப்பூச்சி, கரப்பான்பூச்சி, ஈ, எறும்பு முதலிய அனைத்தையும் வலிவுப் போட்டிக்கோ, வேகப் போட்டிக்கோ, ஒரே நிலையில் பந்தயம் விடுவதைப் போல் உள்ளது. இப்படி விடும் ஓட்டப் பந்தயம் எப்படி நேர்மையான

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)





மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

# இந்திரா சாம்பல் தடுப்பு வழக்கில் உயர் அறமன்ற நடுவரின் தீர்ப்புரை!

உயர் அறமன்றம், சென்னை
(சிறப்பு முதன்மை நெறித்துறை)
12-நவம்பர்-1984-திங்கட்கிழமை

தீர்ப்பு அளிப்பு : மாண்புமை நடுவர் :
திரு. எசு. நடராசன்

முறையீட்டு வழக்கு எண் : 10995-1984

பெருஞ்சித்திரனார்- முறையீட்டாளர்
-தொடர்பு-

1. தமிழ்நாடு மாநிலம், — பொறுப்பாளர்கள்
பொறுப்பு-தலைமைச் செயலர்
தலைமைச்செயலகம்,
சென்னை-9

2. இந்திய ஒன்றியம், ,,
பொறுப்பு-அதன் தலைமைச் செயலர்,
புதுதில்லி

3. முதலமைச்சர், ,,
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 9.

மறைந்த திருவாட்டி இந்திராகாந்தி அவர்களின் எரியூட்டப் பெற்ற உடல் சாம்பலைக் கொண்ட கொள்கலங்கள் பொதுமக்கள் 'தரிசனத்'திற்கென்றோ அல்லது வேறு காரணத்திற்காகவோ மக்களின் வரிப் பணத்தையும், அரசுக் கருவிகளையும் பயன்படுத்திக் கொண்டு இந்தியாவின் பல பகுதிகளுக்குத் தூக்கிக் கொண்டு செல்லும் செயலை விளக்கி அதைத் தடைப்படுத்தக் கோரி இந்திய அரசியல் சட்டம் 226-ஆம் பிரிவின் கீழ் முறையிடப் பெற்ற வழக்கு மேற்சண்ட பொறுப்பாளர்களை நோக்கி உயர் அறமன்றத்தின் ஆணைக்காகப் பதியப் பெற்றது.

ஆணை : 9.11.1984 - வெள்ளிக் கிழமையன்று கொண்டு வரப்பெற்ற முறையீட்டு வழக்கானது (writ petition) தீர்ப்புக்காக ஏற்றுக் கொள்ளப் பெற்று, உறுதிமொழியொடு பதிவு செய்யப் பெற்றதோடும், திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள் தனித்து நேரடியாக எடுத்துரைத்து வழக்காடியதைக் கேட்டுக் கொண்டதோடு அவற்றைக் கருத்தச் சுட்டப்படுத்திக் கொண்டதோடும் அறமன்றம் கீழே கொடுக்கப் பெறும் ஆணையை உருவாக்கியுள்ளது :

இவ் விந்திய நாடு மேனாள் தலைமைஅமைச்சர் திருவாட்டி இந்திராகாந்தி அவர்களின் இறப்பை எண்ணி, இன்னும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் அதே பொழுதில், இத் துணைக் கண்டத்தின் குடிமக்கள் அனைவரும் நீர் ததும்பும் கண்களுடனும், அரத்தம் கொப்பளிக்கும் நெஞ்சத்துடனும், பிரிவுற்ற இந்திராவின் உயிரை எண்ணி மதிப்புடன் இறுதி வணக்கம் செலுத்திக் கொண்டிருக்கும் அதே பொழுதில், இத் தேசக் கொடி இன்னும் அரைக்கம்பத்தில் பறந்து கொண்டிருக்கிற அதே பொழுதில், மக்கள் இவ் விந்திய நாடே கவலையுற்ற நிலையில் மூழ்கிக்கிடக்கிற அதே பொழுதில், இம் முறையீட்டு வழக்கானது (writ petition) இந்திய அரசியல் சட்டத்தின் 226-ஆம் பிரிவின்படி ஏற்றுக் கொள்ளப் பெற்றுப் பதியப் பெற்றது. இவ் வழக்கு மேல்மன்ற முறையீட்டிற்கென எடுத்துக் கொள்ளப் பெற்று, நேரடியாகத் 'தமிழ்நாடு மாநிலப் பொறுப்பாளர், இந்திய ஒன்றியப் பொறுப்பாளர், தமிழக முதலமைச்சர் ஆகியோர் முன்னிலைப் படுத்தப் பெற்று, மறைந்த திருவாட்டி இந்திராகாந்தி அவர்களின் எரிக்கப்பட்ட உடலின் சாம்பலைக் கொண்ட கொள்கலங்கள் பொதுமக்கள் 'தரிசனத்'திற்கென்றோ, பிற காரணங்களுக்கென்றோ இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு எடுத்துச் செல்ல மக்கள் வரிப் பணத்தைச் செலவிடுவதும் அரசுக் கருவிகளைப் பயன்படுத்திக் கொள்வதையும் தடுத்து நிறுத்தக் கோரி முறையிடப் பட்டுள்ளது.

2. முறையீட்டாளர் திரு. பெருஞ்சித்திரனார் தம்மைப்பற்றி வழக்கு உறுதிமொழித் தாளில் குறிப்பிட்டிருந்தபடி அவர் ஒரு பகுத்தறிவாளர், உலகெங்கும் தமிழ்க் குடிகாயத்தினரை முன்னேற்ற உழைக்கும் பொதுத் தொண்டர். அவர் ஒரு மாத இதழும், கிழமை (weekly) இதழ் ஒன்றும், சிறுவர்க்கான மாத இதழ் ஒன்றும் நடத்திக் கொண்டுள்ளார்.

முறையீட்டாளர் தம்முடைய முறையீட்டாகக் குறிப்பிடுகையில் எரிக்கப்படுகிற மாந்த உடலின் சாம்பலில் அறிவியல்வழி பார்த்தால் எவ்வகையான குறிப்பிடத்தக்க, அல்லது முகாமையான உயர்ச்சியோ, குணநலன்களோ இல்லை; இந் நிலையிலேயே மறைந்த தலைமை அமைச்சரின் சாம்பலும் அடங்கிய பொழுதிலும்-அதைச்சிறப்புற்ற நிலைக்கு உயர்த்திக் காட்டக்கூடாததாகும். இவ் வகையில எரிக்கப்பெற்ற உடல் சாம்பலை வழிபடுதலுக்கு உட்படுத்துகிற நிலை தவறான மூடப் பழக்கமும், மதச் சார்புடையதுமே யாகும். இச் சூழலை இந்திய அரசியல் சட்டப்படி நோக்கினோமானால் : "இந்நாடு மதச்சார்பற்ற நாடும், இந்நாட்டு அரசு அனைத்து மதங்களுக்கும் நடுநிலையான பாதுகாப்பைத் தருவதுமாகும் என்கிற வகையில இதற்குத் தனிப்பட்ட எந்த ஒரு மதத்திற்காகவும் தம் உரிமையையோ, ஆளுமையையோ பயன்படுத்தி எவ்வகை மதச் சடங்குகளிலும் கலந்து கொண்டோ அல்லது சார்பையிட்டுப் பொருட்டோ மக்களின் வரிப்பணக் கருவூலத்திலிருந்து செலவழிக்கக உரிமையில்லை" - என்பதேயாகும் ஆனால் இவ் வரசியல் சட்டத்திற்கு முற்றும் மாறானதாக நடுவண், மாநில அரசுகள் மறைந்த தலைமையமைச்சரின் சாம்பலைத் தூக்கிக்கொண்டு இந்தியாவின் பல பகுதிகளுக்குச் செல்கின்றன. அப் பட்டியலில் தமிழக அரசும் இவ் விழிச்செயலை முண்டியடித்துக்கொண்டு செய்வதில் பிற மாநிலங்களுடன் இணைந்து கொண்டு இந்து மத மூடப் பழக்கங்கள் மக்களிடையே பரவிவளர வாய்ப்பு ஏற்படுத்தித் தருகிறது இதுபோலும் மக்கள் 'தரிசனத்'திற்கென்று சாம்பலைக் கொண்ட கலங்கள் அறிவியல் முறைப்படி அல்லாமல், மூடநம்பிக்கைக்குச் சலுகை கொடுக்கிற முறை இஃதோடு நிறுத்தப் படாமல் இவ்வடிமை அமைப்பில் நேர்மையற்ற பிற கட்சித் தலைவர்கள் ஆட்சியாலும் இவ் வழிமுறையைப் பின்பற்றக் கூடியதாக அமையும். அது மட்டுமல்லாமல், பொதுமக்கள் தம் கடமைகளைச் சரிவரச் செய்யாமல் போவதற்கும், அவர்களின் அரிய நேரத்தை வீணடிப்பதற்கும் இது வழிவகுக்கிறது. எனவே அரசின் கட்டுப்பாடு என்பது நாகரிகமான முறையில் புதைக்கப்படுதும், அல்லது இறப்பு உடலங்களை எரிக்கப்படுவதுமாக வரையறுக்கப்பட வேண்டும். அவ் வகையில் மறைந்த தலைவரின் சாம்பலைப் பல இடங்களுக்கும் மக்கள் 'தரிசனத்'திற்கெனத் தூக்கிக் கொண்டு செல்ல வானூர்தி, தொடர் வண்டிகளைப் பயன்படுத்தி மக்கள் வரிப்பணத்தைப் பாழடிக்கிற நிலைக்கு எவ்வகை உரிமையோ, ஆளுமையோ அரசுக்கு இல்லை. மேலும் பொது மக்களுக்கு அறிவு வழி எவ்வகைத் தேவையையோ, ஊதியத்தையோ கொடுப்பதற்கு மாறாக சிறந்த அரசியல் வளப்பாத்திறகாகவும், அரசியல் ஊதியம் நோக்கோடும் ஆளுங்கட்சி தனக்குச் சலுகை கொடுத்துக் கொள்கிறது. எனவே இவ்வழக்கு மன்றமானது, அரசியல் சட்டத்தைமீறிச் செயல்படுத்திக் கொண்டிருக்கும் மேற்கண்ட முறையாளர்களான பொறுப்பாளர்களின் செயல்களைக் கட்டுப் படுத்துவதோடு இம் முறையீட்டு வழக்கு 'மக்கள்தரிசன'த்திற்காக மக்கள் வரி பணத்தையும் அரசுக் கருவிகளையும் பயன்படுத்திக் கொள்வதைத் தடுத்து நிறுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. இவ் வழக்கு. வழக்கு மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப் பெற்ற பொழுது, முறையீட்டாளர் தாமே நேரடியாக வழக்காடும் நிலைக்கு வந்தார். முறையீட்டாளர் தம்முடைய முறையீட்டில் தாம் ஓர் இந்தியக் குடிமகன் என்கிற வகையில் இந்திய அரசியல் சட்டத்தின் 51 A பிரிவின்படி அரசியல் சட்டத்திற்கு மதிப்பு தருகிற நிலையிலும், ஒத்துப் போகிற நிலையிலும் தனிமாந்த அல்லது தனிக் கழகத்தின் வழி இந்திய மக்களின் உடன்பிறப்பு எனும் வகையில் மதம், மொழி இன நிலையிலான பாகுபாடுகளைக் கடந்து இவ்வடிப்படை உரிமையைத் தாம் கொண்டுள்ளதாக எடுத்துரைத்தார். — தொடரும்.

**அன்பர்கள் கவனிக்க....**

'பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாட்களில் மாலையில் 5 மணிக்கு மேல வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அமைச்சர்.

# திசைமாறும் திராவிட இயக்கங்கள்!

தந்தை பெரியார் அவர்களால் தோற்றுவிக்கப் பட்ட திராவிடர் கழகம் குமுகச் சீர்திருத்த இயக்கமாகவே இத்தமிழ் மண்பதையில் தோன்றியது. பேராயக் கட்சியில் மிக மிகச் சிறுபான்மையராய் இருந்த ஒரு சிற்றினத்தின் சாய்கால் தமிழரை அடியோடு கீழே தள்ளி விட இருந்தபோது, வழிப்புற்று, அவ்வியக்கத்தினின்று வெளியேறித் தந்தை பெரியார் அவர்கள், இவ்வியக்கத்தைத் தோற்றுவித்தார்கள். அஃது அவரின் கடுமையான உழைப்பால் நன்கு செழித்துத் தழைத்து மரமாகியது; பயனும் தந்தது. இன்றோ அந்த மரமோ பொந்துகளும் புழைகளுமாகப் பூச்சிகளும் புழுக்களும் தங்கும் உறைவிடமாகி விட்டது. வேரூறுகள் வதங்கின்ற வாழ்விடமாகப் போய்விட்டது. தமிழர் தம் நலம் நாடுவது ஒன்றே குறிக்கோளாய் இருந்தது போய், தம் நலம் நாடுவதென்றே மிகுந்துவிட்டது. அஃது என்னவோ தெரியவில்லை. உண்மையான அப் பழுக்கில்லாத தொண்டராய் தலைவராய் தோன்றுவோர்கள் எல்லாம் நாளாக ஆகத் தந்நலம் நாடும் தலை(வர்)களாக மாறிவிடுகின்றனர். உலகின தாய்மாந்தர் இப்படி மாறி மாறித்தான் பல இனங்கள் உண்டாக வழிசெய்தனரோ என்னவோ?

இன்று பொதுத் தேர்தல் நடக்க இருக்கின்றது. எங்கு பார்ப்பினும் அதைப்பற்றிய பேச்சுகள்தாம்! முன் நடந்த தேர்தல்கட்கும் இப்போது நடப்பதற்கும் பெருத்த வேறுபாடுகள் உள்ளன. மிகமிகச் சாய்கால் பெற இருதலைவர்கள் இன்றி நடத்தப் படும் முதல் தேர்தல் இதுவாகும். எஃது எவ்வாறெனும் மக்களின் நிலை இன்னும் தெளிவடையவில்லை. கட்சிக் கட்டுப்பாட்டை மீறுதல் என்பது இப்போது இயல்பாகிவிட்டது. இடம்கிடைக்கவில்லை என்பதற்காகக் கட்சியை உடைப்பதும் வெறியேறுவதும் நாள்தோறும் நடக்கும் நிகழ்ச்சிகளாகி விட்டன. இந்த நிலையில் திராவிட இயக்கங்களும் கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி.... பின் ஒன்றுமில்லாமல் போன கதைபோல் மாறிவருகின்றன. ஆரியமயமாகிவிட்ட அ.தி.மு.க இப்போது சுக்கலாகி விட்டது. ஓரளவு தமிழினப் பற்றை இன்னும் கொஞ்சம் பற்றியிருக்கிற தி.மு.க.வின் உயிர் ஓடிக் கொண்டிருக்கிறது.

தமிழினத்தைப்பொறுத்தவரை உழைக்கும் இனம் தான் அஃது ஒருமுதலாளிய இனம் இல்லை. குமுகச் சீர்திருத்தம் என்பதிலேயே மொழி, இன, நாட்டு விடுதலையெல்லாம் அடங்கும். எல்லார்க்கும் எல்லாம் பொதுவாகிவிடும் என்ற பொதுமையும் அடங்கும். ஆனால் பொதுவுடைமைக் கட்சியினர் இன்று தங்கள் கொள்கைகளையெல்லாம் பறக்க விட்டுவிட்டுப் பெயரை மட்டும் பொதுவுடைமை என்று வைத்துக் கொள்வதிலேயே பெருமை அடைகின்றனர். மாந்தநேயம், உரிமை, அடிமைவிடுதலை எல்லாவற்றையும் கொண்டுள்ள திராவிட இயக்கங்களும் திசைமாறித் தங்கள் நலமும் தங்கள் உற்றார் உறவினர் நலமும் கொண்டே திராவிட இயக்கமென்று எண்ணித் தங்கள் எதிரிகளின் கையில் தானேபோய் விழும் பேதைமை என்னென்பது. இக்கழகங்கள் எதற்காகத் தொடங்கப் பட்டவையோ அந்த இலக்கினை அறியாமல் தங்கள் பாதையில் பின்னோக்கிப்போய் தோற்பென்று ஆரியத்தின் மடியில் தாழ்ந்து விளையாடுவதிலேயே இன்பம் காண்கின்றன.

திராவிடர் கழகம் தி.மு.க. போலும் ஓரளவு தமிழினப்பற்றுள்ள இயக்கங்கள் இனியாவது தங்கள் திசையினைப் போற்றிக் கொண்டு நேர்வழியில் நடக்க வேண்டும். தமிழர் நலம் நாடும் தலைவர்கள் எல்லாரும் ஒன்று கூடித் தமிழினம் விடுதலை அடையும் வழிவகைகளை ஆய்ந்து செயல்பட்டால் ஒழிய தமிழினம் அடிமைத்தளையினின்று விடுதலை பெறப்போவதில்லை. ஆண்டவர் உலகமுதன்மாந்தர் என்றெல்லாம் பீற்றித் திரியும் தமிழினத்தார் இன்று யார் யாரிடமோ அடிமைப்பட்டுக்கிடக்கும் நிலை இழிவில்லையா? இருண்ட கண்டத்தில் உள்ள ஆப்பிரிக்கா கூட-சிறிய சிறிய தீவுகள் கூட-விடுதலை பெற்றும் நமக்கும் இன்னும் உறைக்கவில்லையே. அஃது இந்தத் திசைமாறிய திராவிட இயக்கத்தார் ஆற்றிய அரும் பணியோ? நமது உடன் பிறப்புகள் தாங்கள் விடுதலை அடைய தங்கள் குருதியை இந்துக்கடலிலும் வங்கக் கடலிலும் கொட்டும்போதும்,சூடு சொரணை இல்லையே' அவ்வளவு அடிமைத்தோல் மரத்துவிட்டதா? இப்

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய இன விடுதலைக் காலம், இது!

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! இரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!


# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-2 இதழ் எண்: 50 (23-12-84) பகுதி-51-52


1- ஆம்பக்கத் தொடர்ச்சி

தாகவும், நயன்மை (நியாயம்) ஆனதாகவும், அறிவுக்குப் பொருந்துவதாகவும் இருக்க முடியாதோ, அப்படியே இந்தத் தேர்தலும் அறிவுக்கும், அறத்திற்கும் பொருந்துவதாய் இல்லை.

பெரிய பெரிய பணமுதலைகளையும், கொடுமையாளர்களையும், கவர்ச்சியான திரைப்பட நடிகர்களையும் பக்கத்தில் வைத்துக் கொண்டு மக்களை அணுகும் ஒருவருக்கும், நேர்மை, உண்மை, தொண்டு, அறிவு, ஒழுக்கம் — இவற்றையே துணையாகக்கொண்டு மக்களை அணுகும் ஒருவருக்கும் உண்டாகும் விளைவு பெரும் அளவில் வேறுபட்டதாகத்தான் இருக்கமுடியும். ஆனால், தேர்தல் என்னும் பெயரால், நாம் அனைவரும் இந்த முறையைத்தான் சரி என்று ஒப்புக்கொண்டு வருகிறோம். இந்த நிலை நீடிக்கும் வரை குடியரசு என்ற பெயரில் கொடியரசு அல்லது கொடிய அரசு ஒன்றுதான் இங்கு இயங்க முடியும். இந்நிலை மாறுவது எப்பொழுது? — எனவே, இப்பொழுதுள்ள தேர்தல் முறையில், ஏழைக்கும், பணக்காரனுக்கும் உள்ள போட்டி பணப் போட்டியாக இல்லாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். இனி, அதற்கு முன்னர் தேர்தல் முறைகளில் கீழ்க்காணும் கருத்துகளைத் தீவிரமாகச் சிந்தித்து, தக்க மாறுதல்களையும் பாதுகாப்புகளையும் செய்தாக வேண்டும்.

1 குடியரசமைப்பில் அமைந்துவரும் நலன்களைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் அனைவரும் சமம் என்பது அறிவுக்குப் பொருந்துகிறது. ஆனால், ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் அரசியல் பொறுப்பிலே, குமுகாயவியல் அறிவும் மக்கள் அனைவர்க்கும் சமமாக இருக்க முடியுமா? இருக்கவே முடியாது எனவே ஒப்பாளர்கள் (வாக்காளர்கள்) தகுதி நிலைகளை அறிவியல் அடிப்படையில் வரையறை செய்தாக வேண்டும் ஒப்பாளர்கள் புள்ளி முறை இதற்கு ஒருவாறு துணை செய்வதாக இருக்கும். அஃதாவது ஒப்பாளர்களின் ஒப்போலைக்கு உரிய புள்ளி மதிப்பீட்டை அவர்களின் கல்வி, பொது அறிவு முறையில் வரையறை செய்ய வேண்டும்.

2 இக்கால் தேர்தலுக்கு நிற்கும் வேட்பாளர்க்கும் இன்றுள்ள நிலையினும் கூடுதல் தகுதிகள் வரையறுக்கப்படுதல் வேண்டும். இப்பொழுது அகவையும், பணமும் பட்டுமே தகுதிகளாக உள்ளன. இவற்றுடன் கல்வி, பொதுநலவுணர்வு பொது ஒழுக்கம் நேர்மை இவை போல்வனவும் தகுதிகளாக ஆராய்ந்து வரையறுக்கப்பட வேண்டும்.

3 இப்பொழுது, தேர்தலில் வன்முறை, ஒழுக்கக் கேடுகள் முதலியன நிறைந்து காணப்படுகின்றன. இவை எதிர்காலத்தில் இன்னும் மிகுந்து விடலாம். அறிவு வளர்ச்சியும் இவற்றுக்கு ஒரு துணையாகவே அமையும். அதனடிப்படையில் கள்ளத்தனமாக ஒப்போலையிடுவதும் இப்பொழுதுள்ளதை விடக் கூடுதலாகவே செய்யும். அவற்றை அறவே தலையிடாதபடி தடுத்து நிறுத்துதல் வேண்டும். தேர்தலுக்காகச் செலவிடப்பெறும் கணக்குகளையும் ஒழுங்கு செய்தல் வேண்டும். இப்பொழுது இவை ஊழலுக்கே வழி வகுக்கின்றவாறு உள்ளன. தக்க அறிஞர்களைக் கூட்டிக் கலந்து பேசி, இவற்றைக் கட்டுப்பாடான ஒழுங்கு முறைக்குக் கொண்டு வர முடியும்.

4 இனி, எல்லாவற்றினும் மேலாகக் கடைப் பிடிக்கப்பட வேண்டிய நடைமுறை ஒன்று உண்டு. அது வேட்பாளர்கள் நடந்துகொள்ள வேண்டிய நடைமுறை பற்றியது. அஃதாவது, எந்த வேட்பாளரும் தனிப்பட்ட முறையில் தமக்கு ஒப்போலையிடுமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொள்ளும்படி இருத்தல் கூடாது. இந்தப் பணியை அரசே திட்டமிட்டுச் செய்தல் வேண்டும். அஃதாவது தேர்தலுக்கு மூன்று நாள்களுக்கு முன்பிருந்தோ, அன்றி ஐந்து நாட்களுக்கு முன்பிருந்தோ, படிப்படியாக. தொகுதி அகர வரிசை முறையிலோ மாவட்ட அகர வரிசை முறையிலோ, வேட்பாளரைப் பற்றிய விளக்கங்களைச் செய்தித் தாள்களிலும், சுவரொட்டி வழியாகவும் பொதுமக்கள் அறிந்து கொள்ளுமாறு தெரிவித்தல் வேண்டும். அல்லது ஒவ்வோர் ஒப்பாளருக்கும் அறிக்கை அடித்துத் தருதல் வேண்டும். இதற்காகும் செலவை வேட்பாளரிடமிருந்து முன்னதாகவே பெற்றுக் கொள்ள வேண்டும். அஃதாவது வேட்பாளரின் பொறுப்புத் தொகையைப் பெறும்பொழுதே. இதற்கான வரையறுக்கப்பட்ட கட்டணத்தையும் வேட்பாளிடமிருந்து பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப் பெறுதல் வேண்டும்.

அரசு அடிக்கும் வேட்பாளர் அறிமுக அறிக்கையில், அவர் பெயர், பெற்றோர் பெயர், அகவை, கல்வி மற்றும் பொதுத் தகுதிகள் அவர் கடந்த காலத்து ஆற்றிய சிறப்புப் பணிகள் போன்றவை விளக்கப்படுத்துதல் வேண்டும். அவரை ஒரு தகுதியுள்ள வேட்பாளராக, அத்தொகுதி மக்கள் ஏற்றுக்கொள்ள விரும்புகிறார்களா என்பதையும் கேட்டு அறிகின்ற வகையில், குறிப்பிட்ட நாளுக்குள் வரும், தொகுதி மக்களின் மறுப்பு வேண்டல்களை அதிகாரிகள் ஆய்வுசெய்த பின்னரே, அவர் தகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட வேண்டும்.

இப்பொழுதுள்ள நிலையில், குறிப்பிட்ட அகவை வந்த எவரும், குறிப்பிட்ட ஒரு தொகையைக் கட்டி விட்டால், தேர்தலில் போட்டியிடலாம் என்னும் நிலை அறவே அறிவுக்கும், ஆளுமைக்கும் பொருந்தாத ஒரு நிலையாகும். இதில் சில குழறுபடிகள் வந்த பின்னர் கூட, இக்கால உள்ள தேர்தல் ஆளுமைக்குழு, அவர்கள் கட்டுகின்ற பொறுப்புத் தொகையை அதிகப்படுத்த வேண்டும் என்று மட்டும் கோரிக்கை விடுத்துள்ளதே தவிர, வேறு வகையான சிந்தனையை அது வைக்கவில்லை.

இவையுடன்றித், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருமுறை இரு முறைகளுக்கு மேல் தேர்தலில் போட்டியிட முடியாதபடி, தடைசெய்யப் படுதல் வேண்டும். இது, வளர்ந்துவரும் மக்கள் தொகையும் அறிவுப் பெருக்கமும் உள்ள நாட்டுக்குக் கட்டாயம் வரையறுக்கப் பட வேண்டிய ஒரு நடைமுறையாகும்.

5 அடுத்து, தேர்தலில் போட்டியிட விரும்பும் எந்தக் கட்சியும் ஆட்சியில் இருக்கவே கூடாது. என்ன சட்ட திட்டங்களை வகுத்துக் கொண்டாலும், ஆட்சியிலுள்ள கட்சி தேர்தலில் தன் ஆளுமை அதிகாரங்களை, நேரடியாகவோ, மறைமுகமாகவோ, பயன்படுத்தித் தனக்கு வாய்ப்பான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொள்வதை, எவரும் கண்டுகொள்ளவோ, தடுக்கவோ இயலவே இயலாது. அத்தகைய சூழ்நிலை இருந்தால், ஆட்சி இயந்திரங்களும், அரசுப் பொருள்களும், அதிகாரங்களும், ஆள்கின்ற கட்சிக்குப் பயன்படுத்தப் படுவது தவிர்க்கவே முடியாது. இந்நிலையில் அறமன்றங்களும் நம்பிக்கைக்குரிய வகையில் நடுநிலையாகவும், நேர்மையாகவும், உண்மையாகவும் செயல்பட இயலாது. ஏனெனில், எல்லா நடுவர்களும் ஆசைபாசமற்ற துறவிகளாகத்தாம் இயங்குவார்கள் என்று உறுதியாகக் கூறமுடியாது.

ஒன்றைப் பொது உண்மையாகக் கருதி நன்றாக எண்ணிப் பார்த்து முடிவு செய்தல் வேண்டும் அஃதாவது, எந்தத் துறையிலும் எந்த நிலையிலும் எந்தக் காலத்திலும், எந்த ஒருவரும், எப்படிப்பட்ட தவற்றையும், முடிந்தால் குற்றத்தையும் செய்தல் கூடும் என்பதை எண்ணியே அது போலும் தவறும் குற்றமும் நிகழாதவாறு, பொது நலங் கருதிய செயல்களுக்கான நடைமுறைகளை வகுப்பதுதான், நல்ல நேர்மையான ஆளுமை முறையாக இருத்தல் முடியும்.

6 இனி, தேர்தலில் ஈடுபடும் வேட்பாளர்கள், அவர்களின் சார்பாளர்கள், கருத்துப் பரப்பாளர்கள், ஒப்போலையிடப் போகும் ஒப்பாளர்கள் ஆகிய அனைவர்க்கும் தேர்தல் காலத்தில் அரசு முழுப் பாதுகாப்புத் தருதல் வேண்டும். இஃது இன்றைய நிலையில் உறுதியற்ற நிலையாகவே உள்ளது. இப்பொழுது நடைபெறுகின்ற வன்முறைகளும் கொடுமைகளும் எதிர்காலத்தில் இன்னும் மிகுதியான முறையில் அறிவியல் தன்மையில் நிகழலாம். எனவே, அப்பாதுகாப்பு, தேர்தல் சட்ட முறையில் உறுதி செய்யப்பெறுதல் வேண்டும்.

7 அடுத்து தேர்தல் முறைகளைப்பற்றிய தெளிவான நடைமுறைகள் இன்றுவரை இல்லை. சில குழப்பமான நிலைகளில் தேர்தல் அதிகாரி(கள்) எடுக்கும் முடிவே சரியானதென்று நெறிமுறை உள்ளது அவ்வாறு அனைத்துத் தேர்தல் அதிகாரிகளும் சரியான முடிவையே எடுப்பார்கள் என்று சொல்ல முடியாது. இனி,தேர்தல் அதிகாரக் குழுவின் முடிவை அறமன்றங்களும் ஏற்றுக்கொள்ளும்படி, இருக்கும் நடைமுறைகள் சரியானவையாக இருத்தல் இயலாது. தேர்தல் தொடர்பான முறையீடுகள், வழக்குகள் இவற்றில், தேர்தலுக்கு முன்னோ பின்னோ அறமன்றங்கள் தம் அதிகார நிலையில், தீர்ப்புரைப்பதே சரியென்ற நிலையை உருவாக்க வேண்டும்.

— இவ்வாறான நிலைகளையெல்லாம் நடைமுறைகளாக உருவாக்கிக்கொள்ளாதவரை, இக்கால் நடைபெறுகின்ற தேர்தல்களையெல்லாம், நேர்மையானவை, உண்மையானவை, நயமை(நியாயம்) ஆனவை, மக்கள் நலம் கருதியவை குடியரசு அமைப்புக்குப் பொருந்தியவை என்று நாம் கருதவும் முடியாது. அப்படி எவரும் கருதிக் கூறிடவும் முடியாது வேண்டுமானால், தந்நலத் தருக்கர்களும், முதலாளியக் கொள்ளையர்களும், அரசியல் தித்திருக்கர்களும் குமுகாயக் கயவர்களும் வேண்டுமானால், இப்பொழுது உள்ள தேர்தல் முறைகளே சரியானவை என்றும், மாற்றத் தேவையற்றவை என்றும் கூறிடலாம். இத்தகையவர்களே இன்றைய அரசியலமைப்பால் நலம் பெறுகின்றவர்கள் என்பதையே அவர்கள் கூற்று உறுதிப்படுத்துவதாக ஆகுமே அல்லாமல், உண்மையானது ஆகிவிடாது.

இந்தியா விடுதலைபெற்று முப்பத்தேழு ஆண்டுகள் ஆகியும். இத்தகைய போலியும், பொய்யும், புரைகளும்,புன்மைகளும் நிறைந்த ஓர் அரசியல் அமைப்பின்கீழ் நாம் வாழ்ந்து வருகிறோம் என்பதில் நாம் வெட்கமும்,வெறுப்பும் அடைதல் வேண்டும். ஆனால், அதற்கு மாறாக நாம் இவ்வரசியல் அமைப்பில் நிறைவுறுகிறோம்; மகிழ்வடைகிறோம்; அதையே மேலும் மேலும் வரவேற்று உறுதிப்படுத்தும் வகையில், ஒற்றுமை என்றும், ஒருமைப்பாடென்றும் மக்களை ஏமாற்றியும், ஏத்தியும் திரிகின்றோம் என்றால், நமக்கு மானமும் இல்லை; சூடு சுரணையும் இல்லை; மக்களிடம் நமக்கு அன்பும் அக்கறையும் இல்லை என்பதை விட, வேறு பொருள் என்னவாக இருத்தல் முடியும்? இந்திப் பாருங்கள்!




# குடியரசமைப்புக்குத் தேர்தலே முதல் கருவி!

# இந்திரா, இருந்தும் ஆரவாரம்! இறந்தும் ஆரவாரம்!

## ஆரவாரமே அரசியலா? அரசியலே ஆரவாரமா?

"தமிழ்நிலம்" பொறுப்பாசிரியர் அவர்களுக்கு வணக்கம். தங்கள் நலம்நாடும் அன்பனின் மடல்!

கடந்த திங்கள் கடைசியில் இந்திராவின் கடைசி தான்" என்பது அனைவரும் அறிந்ததே! அன்னாரின் இறப்பு செயற்கையானதெனினும்; சிந்தனைக்குரியது! ஆனால் உலகில் இதுவரை நடைபெறாத அளவு விளம்பரங்கள் ஊர்வலங்கள் பட்டிதொட்டியெங்கும் நடைபெறுகிறது. இதுவும் பார்ப்பனர்க்கு (பிரச்சார) விளம்பர உத்திகளின் ஒரு வெள்ளோட்டமே என்பதைச் சிற்றறிவுக்கும் தெரியும் வகையில் ஊர்தோறும் சோறு ஆக்கி ஏழையர்களை மயக்குவது, குறிப்பாகப் புதுக்குடியின் நடுவில் ஓர் அச்சங் கலந்த அழிவிரக்கம் தேடுதல், வேட்டி துண்டு கொடுத்து மொட்டையடிக்க வைத்தல் போன்றவை இனி நாடு என்னாகுமோ எனக்கவலுறும்படி, கூறுதல்-போன்றவை இந்தியாவில் எங்கும் காணமுடியாத நிலையில் தமிழகம் செயல் புரிந்தது?

ஆயினும் இதுவரை ஒரு பார்ப்பனத் தெருவில் சோறு போட்டதாகவோ ஒரு பார்ப்பனர் தீக்குளித்ததாகவோ ஒரு பார்ப்பனர் மொட்டையடித்து வேட்டி துணிவாங்கியதாகவோ செய்திகளில்லை காரணியம் அவன் அறிவுள்ளவன். நாம் அறிவை அடகு வைத்துச் சோற்றுக்கும் வேட்டிக்கும் அலையும் நேரத்தில், அரசியல்காரர்கள் ஒப்பாரி பொறுக்க ஒலிபெருக்கியில் அலைவது பகடிக்குரியதாகும்; என்றாலும் அரசை அணைத்து மடத்திரும் ஓர் இழவு வீடாகவே கருத வேண்டிய அளவு மக்கள் பணம், பொருள் வீண் செலவாகிறது. மக்கள் தலைவர் காமராசர், அறிஞர் அண்ணா போன்றவர்களுக்கில்லாத சாய்கால் தமிழகத்தில் அன்னை இந்திரா பெற்றிருக்கிறாரா என்றால் இல்லை! அரசியல் விளம்பரத்திற்காக இந்தச் செத்த பாம்பாட்டும் வேலை மிக விரைவடைந்துளது. அந்தோ! அ.தி.மு.க. கூட்டணி சேரவேண்டி கூத்துகள் நடத்தி வருகிறார்கள் சீக்கிய இனமே அழிகிறதே என்று எவராவது இதுவரை வாய்திறந்தார்களா? சிற்றூர்ப்புறத்தில் ஒரு பழமொழி கூறுவார்கள் "கணக்கன் இருந்தும் கெடுத்தான்; செத்தும் கெடுத்தான்" என்ற. தமிழகத்தைச் சாம்பலடித்தது போதாது என மீண்டும் சாம்பல்சட்டி ஊர்வலம்; மொட்டையடித்தது போதாது என மொட்டையடித்து ஊர்வலம் இத்தமிழக மக்களாகிய மூத்த குடியினர் திருந்தக் கூடாது! ஓர் அணுக்குண்டு வீழ்ந்து அழிக்க வேண்டும்! என் மனக்குமுறல் தாளாதுக் கொட்ட வேண்டிய நிலை. இம்மடலில் கொட்டிவிட்டேன். குறைகாணின் குட்டுங்கள்!

— க. சிவமணி

# வைப்பகக் கடன் யாருக்கு?

நடுவணரசாயினும் சரி தமிழ்நாட்டு அரசாயினும் சரி, குமுகாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் மக்களை மலர்ச்சியுறச் செய்வதற்கெனத் திட்டங்களைத் தீட்டுகின்றன. அவர்கட்காகவே அமைக்கப்பட்ட அரசு போல அவர்களின் உள்ளங்களில் நம்பிக்கையைத் தூவுகின்றன. ஒரு திங்களிலோ அன்றி ஓராண்டிலோ இந்நாட்டில் ஏழ்மை என்பதை இல்லாமல் செய்து விடுகிறோம் பார் என்று எக்காளம் ஊதுகின்றன. அந்தோ அந்தத் திட்டங்கள், பணிகள் எல்லாம் யாரைச் சென்று அடைகின்றன? பணம் படைத்தோரைத் தாம் என்று அரசும் நினைக்கிறது. 'ஆ'வென்று அங்காந்தபடி நிற்கும் அரசையிற்று அடித்தாத்து மக்களும் நினைக்கின்றனர்.

வைப்பகங்கள் எல்லாவற்றையும் நாட்டுடைமையாக்கியதே அவற்றைக்கொண்டு எளியமக்களை முன்னேற்றச்செய்ய வேண்டும் என்னும் குறிக்கோளுக்குத்தான். அதில் உள்ள பணத்தைக்கொண்டு வறுமைக்கோட்டுக்குக் கீழ் இருக்கும் மக்களை வளம் பெறச் செய்ய வேண்டும் என்பதற்குத்தான். ஆனால் நடப்பது என்ன? எட்டாண்டுகட்கு முன் வறுமைக்கோட்டிற்குக் கீழ் இருந்தவர்கள் இன்னும் அந்த கோட்டிற்குள் தான் இருக்கின்றனர். அதைவிட்டு வெளியேறிய பாடில்லை. மாறாக, அந்தக் கடன் உண்டு, இந்தக் கடன் உண்டு. உங்கட்குக் கிடைக்கும் இந்தப் படிவத்தில் கையொப்பமிடுங்கள், படிவச் செலவு இவ்வளவு, அனுப்புக் கூலி இவ்வளவு, அலுவலக ஏவலன் முதல் தலைமை அதிகாரி வரை அளக்க வேண்டியது. இவ்வளவு என்று அன்றாடங் காய்ச்சிகளிடம் அடாவடித்தனமாக வாங்க, அவர்கள் படும் அல்லலை அதிகமாக்குகின்றனர். அரசியல் தரகர்கள். அன்றாடங் காய்ச்சிகளோ தங்கட்கு இன்று உணவில்லையெனினும் நாளை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் 'ஏதோ கடன் பட்டு அவர்கள் கேட்கும் தொகையான ஐம்பது நூறைத் தருகின்றனர். அதை வாங்கிக் கொண்டு தங்களின் வெட்டிச் செலவுகட்கு இதை இறைத்து விட்டு அவர்களிடம் இன்றுவரும் நாளைவரும் என்று சொல்லி ஏமாற்றுகின்றனர். அதில் ஓரிருவருக்கும் கேட்டபணத்தைச் சரியாகவோ அல்லது கூடுதலாகவோ கொடுத்தவர்க்குக் கிடைக்கவும் செய்கின்றனர். அதில் செம்பாகம் கைக்கூலியாக வைப்பக அதிகாரி மற்றும் எல்லாக் கயவர்கட்கும் அள்ளித் தந்தது போக, எஞ்சியதை முறையாகப் பயன்படுத்த முடியாமற் போவதோடு இன்னும் அதிகமாக அல்லல் படுகின்றனர்.

மாறாக இந்த எளியமக்கட்காகத் தீட்டப்படும் திட்டங்கள் எல்லாம் எளியவர் என்னும் பெயரில் பணக்காரர்களைத்தாம் சென்று அடைகின்றன. அவர்கட்கு அரசியல் தரகர்கள் வேலைசெய்கின்றனர். நாளை கட்சிப்பணம் தேர்தல் பணம் என்று கேட்க வேண்டுமே அதற்காக.

இந்த இரண்டு அரசுகளின் திட்டங்கள் எல்லாம் பணம் படைத்தவர்களை மேலும் உள்ளவர்களாகவும் ஏழையரை இன்னும் இலாதவர்களாகவும்தாம் ஆக்குகின்றன. இந்த இலக்கணத்தில் ஏழை பாழைகட்காகவே அமைந்த அரசுகள் இதுவென நாடகமாடுகின்றனர். இந்த எளியவர் என்றுதான் நிலை உணர்வாரோ?

— திருமுடிக்காரி —

# பொள்ளாச்சி மகாலிங்கத்திற்கு எதற்கு மொழியாராய்ச்சி?

அண்மையில் ஆரியஅடிவருடி பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்களால் நடத்தப் பெற்றுவருகின்ற ஏப்பிரல் மாத "சகதி" இதழில் பா. கைலாசநாத காட்கு என்பவர் "இந்தியாவின் தேசிய மொழியாகஇருக்க வேண்டுவது சமற்கிருதமே" எனக் குறிப்பிட்டிருக்கின்றார். அவர் மேலும் கூறுகையில், "இந்தியாவில் பண்டைய இலக்கியம் முழுவதும் சமற்கிருதத்தில்தான் உள்ளது. ஒவ்வோர் இந்துவும் நாள்தோறும் சமற்கிருத வழிபாடுதான் செய்கிறான். அம்மொழிக்கு மாநில வெறுப்பில்லை. எல்லா மொழிகளும் அதனைத் தாயாகவே கருதுகின்றன. கலை, அறிவியல், நாடகம், சிற்பம், வான இயல், மருத்துவம், கணிதம், எந்திர நுட்பவியல் சொற்களெலாம் அவற்றில் புதைந்து கிடக்கின்றன. ஆங்கிலம் கற்கிற காலத்தில் பாதிக்காலமாவது சமற்கிருதம் படித்தால் இந்தியா முன்னேறிவிடும். சமற்கிருதத்தைக் கல்லூரி, பள்ளி, சட்டமன்றங்களில் பயன்படுத்தினால் ஆங்கிலத் தரத்திணையாக வளர்ச்சி பெற்றுவிடும்" எனக் கூறுகின்றார்.

ஏமாளித் தமிழர்களே! இதற்கென்ன கூறுகின்றீர்கள்? சோலிப பொதுவுடைமையரே போதுமா! மொழி ஒரு கருத்தைப் புரிந்துகொள்ளும் கருவிமட்டும் தான் என்று கூறுகின்றீரே? சமற்கிருதத்தால் இந்தியாவின் வளர்ச்சி(?)யைப் பார்த்தீரா?

அவர் குணம் ஒன்றே! உன்தொடையில் அவன் கயிறையும் திரிப்பான்! பின்னர் சுருக்கும் போட்டு விடுவான்! அதுவரையிலும் தூங்கு!

செய்தி : "இளந்தமிழன்"

# "தீபாவளி"யைத் தமிழர்கள்தாம் கொண்டாட வேண்டுமாம்!

## உளறுகிறார் ம. ந. இராமசாமி!

அண்மைக்காலமாக திராவிட இனவுணர்ச்சி காரணமாக 'தீபாவளி'யைப் புறக்கணிக்க வேண்டுமென்ற எண்ணம் பரவுகிறதைத் தடுக்கும் பொருட்டு ஆசிரியர் கலைமாழி (திசம்-82) இதழில் தீபாவளி - விழா தமிழர்களுக்குரியதே என்று தமது நுண்ணிய(?) ஆராய்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

"ஆரியக் கூட்டத்தின் தலைவன் நரகாசுரன் போர் நடக்கிறது. திராவிட இனத்தவர் தோற்கின்றனர். ஆரியர்கள் படை திராவிடப் பெண்களை கடத்திச் செல்கின்றது. திராவிட இனத்தவர் உத்வேகம் கொள்கின்றனர். மீண்டும் மூர்க்கமாகப் போரிட்டுத் தங்கள் பெண்மக்களை மீட்டு வருகின்றனர். அப்படி மீட்டு வந்த நாள்தான் தீபாவளித் திருநாள். தீபாவளித் திருநாள் என்பது திராவிடர்கள் கொண்டாட வேண்டிய ஒரு பண்டிகை". .............. அதனாலே பிராமணர்கள் பெருமை சேர்க்கிறதுக்காக நரகாசுரனோடு போர் செய்தது கிருஷ்ணன்னு எழுதி வச்சிட்டாங்க" ... "அதனாலே திராவிடர்கள்தாம் தீபாவளி கொண்டாடுவது நியாயம். யாரோ சொன்னாங்கன்னு, நரகாசுரனை திராவிடனாகப் பண்ணி, ஸ்ரீகிருஷ்ணனையே ஆரியனாக வர்ணித்து, வரலாற்றையே மாற்றி நீங்களும் ஏமாந்து, நாட்டு மக்களையும் ஏமாத்திட்டாங்க"

இவ்வாறு அக்கதையில் பகுத்தறிவுணர்ச்சியுள்ள ஓர் சீர்திருத்தப் பெரியவரை அந்தப் பார்ப்பனர் (இருவரும் சம்பந்திகளாம்) திருத்த வைப்பதாக வருகிறது.

அடிப்படை : 'கலைமாழி'. திசம்பர். 82. பக்க எண் 41-45

### உங்கள் ஊரில் தமிழ்நிலம்...!

தோழமை உள்ளங்களே...! உங்கள் ஊரில் 'தமிழ்நிலம்' கிடைக்கவில்லையா, உடனே உரு.5/= அனுப்பி வைத்து 10 தமிழ்நிலங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஒருபடி 65-காசு பேணி விற்று எச்சத் தொகையை உங்கள் செலவிற்குப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இனப்பார்வைக்கு அப்பாற்பட்டது நேர்மை!

## இந்திரா போல் யாராலும் புகழ் பெற முடியும்!

### 'துக்ளக்' தீர்ப்புத் தருகிறது

கேள்வி : இந்தியா முழுவதும் பாமரமக்கள் கூட அறிந்த அரசியல்வாதியாக இந்திராகாந்தி விளங்கியது போல, வேறு ஒருவரால் அந்த இடத்தைப் பிடிக்க முடியுமா?

பதில் : வேறு ஒருவர் அந்த இடத்தைப்பிடித்து, பதினாறு வருடங்கள் பதவியில் தொடர்ந்து, டி.வி., ரேடியோ போன்ற சாதனங்களைத் தன்னுடைய விளம்பர ஒலிபெருக்கியாகவே பயன்படுத்தினால், இதே அளவில் அவரும் மக்களால் அறியப்படுவார்.

— 'துக்ளக்' இதழ். – 15.11.84 பக். 28.

# இளைஞரே! விடுதலைக்கூட்டணியில் சேருவீர்!

# "தென்மொழி இலக்கியக் கழகம்" அமைப்பாய்வுக் கூட்டமும், உ.த.மு.க. - வினையாய்வுக் கூட்டமும் - நெல்லை

2.12.1984 ஞாயிற்றுக்கிழமை பின்று மாலை 3.00 மணியளவில் திருநெல்வேலிச் சந்திப்பு - நகராட்சித் திருமண மண்டபத்தில் "தென்மொழி இலக்கியக் கழகம்" - என்னும் இலக்கிய அமைப்பின் தொடக்கவிழா நடைபெற்றது. இத்தொடக்கவிழாக் கூட்டத்தில நெல்லை மாவட்ட (வடக்கு, தெற்கு) உ.த.மு.க. பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

பல்வேறு அமைப்புகள், இயக்கங்கள், கட்சிகளைச் சார்ந்திராத தனித்தமிழின - நாட்டு விடுதலையுணர்வு உள்ளவர்களை இணைப்பதும், தமிழகத்தில் அண்மையில் அமைந்த "ஒடுக்கப்பட்டோர் உரிமை மீட்புக் கூட்டமைப்பு"பின் ஆணைகளுக்கு ஏற்ப உழைப்பது மாகிய நோக்கங்களை முகாமையாகக் கொண்டு இக்கழகம் இயங்கும். மேலும்,

x தனித் தமிழ் நாட்டு விடுதலை முயற்சிகளில் பங்கு பெறுவது.

x தமிழ்-மொழி, இனம் நாட்டு நலனும் வளனும் சார்ந்து உருவாகிய கொள்கைகளை மக்களிடையே பரப்புவது.

x தமிழின-நாட்டு விடுதலைக்கு இளைஞர்களைத் தூண்டுவது. இயக்கப் பின்பற்றாளராப் பயிற்று விடுப்பது.

x தோழமை இயக்கங்களின் விடுதலை முயற்சிகளுக்குத் துணை நல்குவது.

x தமிழகத்தின் கலை, இலக்கியம், நாடகம், திரைப்படம், தாளிகைகள் ஆகியவற்றின் நோக்கினையும் போக்கினையும் ஆய்வு செய்து, தமிழினப் பகைமைகளையும் போலிமைகளையும் மக்களின் முன் தோலுரித்துக்காட்டுவது.

x முற்போக்கான-மக்கள் நலஞ் சார்ந்த தூய தமிழ்ப் படைப்பாக்கங்களை மக்களுக்கு அறிமுகம் செய்வது.

x ஆங்காங்கே கொள்கை விளக்க வகுப்புகள் நடத்தி இளைஞர்களைப் பயிற்றுவிப்பது.

x ஆலைத் தொழிலாளரிடையிலும் பிற பாட்டாளி மக்களிடையிலும் உள் நுழைந்து உழைப்பது.

x தனித் தமிழில் கதை நாடகம் ஆகியவற்றை உருவாக்கும் படைப்பாளரை ஊக்குவிப்பது.

x மாதந்தோறும் மாவட்டத்தில் ஏதானுமோர் ஊரில் கூடுவது. அறைக் கூட்டமாகவோ, கலந்துரையாடலாகவோ அமைப்பது. இயல்கின்றபோது பொதுக் கூட்டம் போடுவது.

x செல்லுமிடங்களுக்கு அண்மையிலமையும் சிற்றூர்களில் தெரு பரப்புரையாகக் கொள்கைகளை மக்களிடைக் கொண்டு செல்வது.

x "தென்மொழி", "தமிழ்நிலம்" ஆகியவற்றை மக்களிடைப் பரப்புவது. செல்லுமிடமெங்கும் உறுப்பாண்மை சேர்ப்பது. ஆங்காங்கே உள்ள நூலகங்களில் தத்தம் பொறுப்பில் அவற்றை இடம் பெறச் செய்வது.

x "தமிழ்ச்சிட்டு" எல்லாப் பள்ளி மாணவர்களும் அறிந்து, படிக்கும் வகையில், பள்ளி வாயில்களிலேயே நின்று கூவி விற்பது.

x நம் கழக இதழ்களையும் நாட்டின் அரசியல், பொருளியல், குமுகாயவியல் நிலைகளையும் பேருந்துகளில் வண்டிகளில் செல்லும் போதெல்லாம் எடுத்து வைப்பது.

x நம் நோக்கங்களை மக்களுக்கு அறிவிக்கும் வகையில அவ்வவ் ஊர்களில் தட்டிப் பலகைகளில் கொள்கைகளை எழுதி வைப்பது.

x நம் இதழ்களையும் அமைப்பினையும் சுவரெழுத்தில் அறிமுகம் செய்வது.

- ஆகிய பணிகளை நிறைவேற்றும் ஒரு பயிற்சிப் பாசறையாக இவ் இலக்கிய அமைப்பு விளங்கும். உறுப்பினராக எவரும் சேரலாம். கட்டணமில்லை. யாவரும் ஆர்வலரே. கழகத்தின் அமைப்பாளர்களாக உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் நெல்லை(தெற்கு) மாவட்டச் செயலர் திரு இனநல வேந்தன், நெல்லை நகரத் திராவிடர் கழக இளைஞர் அணியைச் சேர்ந்த திரு சாகீர்உசேன் ஆகிய இருவரும் அமர்த்தப் பட்டனர்.

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் கொள்கை முரசமாகிய "தமிழ்நிலம்" பரப்புவதும், அதன் அச்சக அமைப்புத் திட்டத்திற்கு உதவுவதும் உடனடித் தேவையாகும் என்பதை வலியுறுத்தி, உ.த.மு.க.வின் துணைப்பொதுச்செயலர் திரு. தென்னவன் கோ பசுபோக, உலகெங்கிலும் இனவிடுதலை முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்தியாவெங்கிலும் தனித்தனித் தேசிய இனங்கள் தமது விடுதலைக்காகப் போராடி வருகின்றன. இவ்வேளையில் இந் நிலத்தில் முள் காடாகப் புதர்ந்து அடர்ந்து கிடந்த நிலை, களையப்பட்டு வருகிறது. முள் மரங்கள் சாயத் தொடங்கி விட்டன. இனி, இதனை உழுது பண்படுத்தி விதைக்க வேண்டியதுதான். பெரியார் முள்மரப் பிடுங்கலை நடத்துவதிலேயே தம் வாணாளை முடித்துக் கொண்டு விட்டார். பெரியாருக்குப் பின்னால் பாவலரேறு ஐயா அவர்கள் இத் தமிழ மண்ணில் அடர்ந்து கிடந்த முள் புதரினைத் தூர்க்கும் கடமையிலும், உழுது பண்படுத்தும் பணியிலும், நல்ல விதைமணிகளை உருவாக்கும் அறிவுழைப்பிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்கள். கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக முரண்படாத அறிவுச் செல்வத்தை வழங்கி வருகிறார்கள். போர்க்களத்தை மட்டும் காட்டாது, போரிடும் வழிமுறைகளையும் உருவாக்கி, போர்க் கருவிகளையும் படைத்து வருகிறார்கள். அவரின் அறிவுப் படையின் கூர்மையினையும், எதிரிகளை வீழ்த்தும இலக்கினையும் உணர்ந்து கொண்ட மக்கள் நலத் தொண்டர்கள், ஐயா அவர்களின் படையில் அணிவகுக்கத் தொடங்கி விட்டனர். சாதி மதச் சண்டைக்காடாக உருமறிய தமிழ்நிலத்தில் தமிழ் மொழி விதையூன்றப்பட்டுத் தமிழினப்பயிர் வளர்ந்து செழிக்க வேண்டுமாயின் தனித்தமிழ்நாட்டு வேலி யமைதல் வேண்டும். இல்லெனில் காலம் நம் வரலாற்றை மாற்றியெழுதும். கனிந்து வரும் காலத்தில் இத் தமிழ் ஞாலத்தைக் கையகப்படுத்தும் பணியில் முனைந்து நிற்போம்" என்று "தென்மொழி"த் தொண்டு வரலாற்றை விரித்துரைத்தார்.

கலந்து கொண்ட அன்பர்கள் யாவரும் தத்தம் கருத்துகளை எடுத்து விளக்கினர்.

திருவாளர்கள். அதியமான் (உ.த.மு.க., தாழையூற்று) இரா. பாண்டியன் உ.த.மு.க கடையநல்லூர், அ. தமிழன்பன் உ.த.மு.க கடையநல்லூர், தென்மாறன் உ.த.மு.க தென்கலம், கோ. எழிலன் (இராமன்) பாளையங்கோட்டை ச. வேல்பாண்டி திராவிடர் கழகம், பேட்டை இரா. சண்முகம் உ.த.மு.க நெல்லை.

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம் பார்க்க)

# உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் சங்கராபுரம் கிளை - தொடக்க விழா :

கடந்த 2.12.84 ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணி அளவில், சங்கராபுரம், அரசு மேல் நிலைப் பள்ளி (பழைய கட்டிடம்), பாவாணர் அரங்கத்தில், உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் சங்கராபுரக் கிளையின் தொடக்க விழா இனிதே நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு, உ.த.மு.க. கள்ளக்குறிச்சி வட்டத் தலைவர் திரு. நெடுவேல் சேரன் அவர்கள் தலைமை யேற்றார். தலைவர் தம் முன்னுரையில் பாவலரேறு அவர்களின் மொழி இன, நாட்டுத் தொண்டை விரிவாக எடுத்துக்கூறி, உ.த.மு.க. கொள்கைகளையும் விளக்கி, விழாவை வரவேற்றுப் பேசினார்கள்.

வரவேற்புரையாற்றிய, தென்னார்க்காடு தெற்கு மாவட்ட உ.த.மு.க. செயலர் திரு. செ.வ. புகழேந்தி அவர்கள் அனைவரையும் இனிது கூறி வரவேற்றார். அவருரைக்குப் பின், தெ.ஆ. தெற்கு மாவட்ட உ.த.மு.க. தலைவர் புலவர். திரு. தூக்கிய திருவடியார், கழகத்தின் தேவையையும் முதல்வரின் தொண்டு நிலைப்பையும் எடுத்துப் பேசி, தமிழினம் ஒன்றுபட வேண்டிய இன்றியமையாமையை விளக்கி, கழகக் கொடியினை ஏற்றி வைத்தார்.

பின்னர், கள்ளக்குறிச்சி, புலவர் திரு. செ. வரதராசனார் அவர்கள், கழகத்தை வாழ்த்திப் பேசினார். அவரைத் தொடர்ந்து, திருவாளர்கள் புலவர். பெ செயராமன் க.மு.,கல்.இ; மது. நாராயணசாமி, தென்னார்க்காடு வடக்கு மாவட்ட உ.த.மு.க. தலைவர் தமிழவேள் உளுந்தூர்ப்பேட்டை உ.த.மு.க. வட்டத் தலைவர் சித்தலைச்சாத்தனார், வட்டச்செயலர் செம்பியன், சங்கராபுரம் கிளைத்தலைவர் இரா. பழனிச்சாமி வணி.இ., பொருளர் பாவலர் சக்கரபாணி, சௌந்தரவல்லி பாளையம் ஆசிரியை திருவாட்டி செயலக்குமி கண்ணாயிரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். அவர்களை அடுத்து, பாவேந்தர் பாரதிதாசனார் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்து, தென்னார்க்காடு தெற்கு மாவட்ட உ.த.மு.க. பொருளரும், நிகழ்ச்சி அமைப்பாளருமாகிய புலவர் திரு. தமிழ்வேந்தன் எழில் அவர்கள் உணர்வுரையாற்றி, நாட்டு விடுதலைக்குத் தம் நல்லுயிரையும் ஈவதாய்ச் சூளுரைத்தார்கள். பின்னர் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்துப் பேசிய புலவர் திரு. இ. தேவநேயச் சித்திரனார் க.மு. அவர்கள், தமிழின நலம் ஒன்றுபடுவதன் இன்றியமையாமையை, வரலாற்று வழி வலியுறுத்தி, உ.த.மு.க.வின உயர்ந்தகொள்கைகளை எடுத்து விளக்கி, இவ் வியக்கம் பரவவேண்டிய தேவையை அழகுற எடுத்து விளக்கினார்கள்.

இவர்களை அடுத்த, தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சி(மா.இலெ.) தலைவரும், ஏறத்தாழ 14 ஆண்டுகள் குடும்பத்துடன் சிறையிற் கழித்த செயல் வீரரும் ஆகிய புலவர், திரு. கு. கலியபெருமாள் அவர்கள் ஏறத்தாழ ஒரு மணிநேரம், தமிழினத் தொழிலாளர்களும் உழவர் பெரு மக்களும் பலவகையிலும் நலிவுற்று வாடுவதையும், பெருமுதலாளிய, நிலவுடைமையாளர்களின் பல்வேறு வகையான சுரண்டல்களையும் எடுத்துக்காட்டி, மார்க்சியக் கொள்கைகளை விளக்கி, இவ்வனைத்து நிலைகளுக்கும் தமிழ்த் தேசிய இன விடுதலையே முற்றமுடிந்த முடிவாகும் என்று விரிவாகப் பேசினார்கள்.

இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், தமிழினவரலாறு எவ்வாறு மேலைநிலையினின்று படிப்படியாய் வீழ்ச்சியுற்றதென்றும், அதனை எப்படிப் பல நிலைகளிலும் மீட்சிபெற முயற்சி செய்ய வேண்டுமென்றும், வரலாற்று நிகழ்வுகளில் பலவாறு விளக்கித் தொடக்கக் காலத்தில் இதைமீட்கச் செய்த திருவள்ளுவரின் முயற்சிகளையும் கருத்துகளையும், பின், பிற்காலத்துப் பெரியார் செய்த இன நலத் தொண்டுகளையும் விளக்கமாக எடுத்துக்காட்டியும் ஏறத்தாழ மூன்று மணி நேரம் விரிவுரையாற்றினார்கள். நல்ல பனியில், இரவு ஒருமணி வரையிலும் நடந்த இவ் வுணர்வு உரையினை உள்ளூரினின்றும் வெளியூர்களினின்றும் வந்திருந்த பெருமக்கள் அனைவரும் அமைதியாக இருந்து கேட்டது குறிப்பிடத்தக்கது. நிகழ்ச்சி முடிவில் திரு. ஆ காசிநாதன் நன்றி கூறினார். பாவலரேறு உரையாற்றத் தொடங்குகையில், புலவர் தேவநேயச்சித்திரன் - சித்திரச்செல்வி இணையரின் திருமகன், செல்வன் தே.சே.பேரியற்கைப் பேரின்பம் பாவலரேறு அவர்களுக்குப் பட்டாடை போர்த்தி, "ஐயா நடத்தும் மொழி, இன, நாட்டு நலப் போராட்டங்களில் பங்கேற்கத் தானும், தன் பெற்றோருடன் என்றும் அணியமாக இருப்பதாகக்" கூறியது குறிப்பிடத்தக்கது.

நிகழ்ச்சிக்குப் பின், வெளியூர் அன்பர்கள் அனைவர்க்கும் உணவு விடுதியிலும், புலவர் தமிழவேந்தன் எழில் அவர்களின் இல்லத்திலும இரவு உணவு ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது. நிகழ்ச்சியைப் பல்வேறு இடர்ப்பாடுகளுக்கும இடையில், பெண்ணாகடத்திலிருந்து வந்து ஏற்பாடு செய்து, அனைவரின் பாராட்டுதலையும் பெற்ற புலவர் தமிழ்வேந்தன் எழில் அவர்களின் விடாமுயற்சியையும் வினைத் திறத்தையும் பாவலரேறு அவர்கள் மிகவும் பாராட்டி மகிழ்ந்தார்கள் என்பது உணரத்தக்கது. 0

# எழுக தமிழனே! இனநலம் பேணுக!

# ஒடுக்கப்படுவோர் உரிமை மீட்புக் கூட்டமைப்பு - தொடக்கக் கூட்டமும், வாழ்நாள் சிறையாளிகளை விடுவிக்கக் கோரிய பொதுக் கூட்டமும்!

கடந்த 11.11.84 - ஞாயிற்றுக்கிழமை குறிப்பிட்டதுபோல் 'ஒடுக்கப்படுவோர் உரிமை மீட்புக் கூட்டமைப்பு,' - தொடக்கக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு முந்தைய நாள்வரை கூட்டமைப்பு இயக்கங்களின் செயலாளர்கள் ஒன்றுகூடிக் கூட்டம் சிறப்புற நடைபெற, தத்தம் இயக்கங்களுக்கும் சில பணிகளை ஒதுக்கிக்கொண்டு செவ்வனே செய்து முடித்தனர்.

9-11-84 - ஆம் பக்கல் மாலை 4 மணியளவில் கூட்டமைப்பு பற்றி விரிவாகச் செய்தியாளர் கூட்டமொன்று சென்னை, உட்லண்சு விடுதியில் நடைபெற்றது. புலவர் கலியபெருமாள், திரு. ஆர்.கே. சுவாமிநாதன் ஆகியோர் செய்தியாளர்களுக்குக் கூட்டமைப்பைப்பற்றி வெளிப்படுத்திக் கொண்டிருக்கையில் வழக்கறிஞர் திரு பி.வி பக்தவத்சலம், பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆகியோர் இந்திராவின் சாப்பல் தொடர்பான வழக்கை முடித்துக் கொண்டு வந்திணைந்தனர். செய்தியாளர்களுக்குத் தெளிவான முறையில் கூட்டமைப்புத் தொடர்பான செயல் திட்டங்கள் அமைப்புமுறைகளை விளக்கிய பின் 5-மணியளவில் செய்தியாளர் கூட்டம் முடிவுற்றது.

11.11.84 - அன்று காலை 8.30 மணியளவிற்கு பாவலரேறு பெருஞ்சித்திரனார், திரு. நாகராசன் ஆகியோர் சென்னை, புதுப்பேட்டையில் உள்ள 'சுபசன்' அரங்கிற்குள் நுழையும் பொழுது வெளியில் புயலொடு இடைவிடாத மழை பெய்ந்து கொண்டிருந்ததால் கூட்டம் கூடாமல் இருந்தது. புலவர் கலியபெருமாள், தம் இயக்கத் தோழர்கள் சிலருடன் முன்கூட்டியே வந்திருந்து அரங்கு அமைப்பு நிலைகளில் தோழர்களை ஈடுபடுத்தியிருந்தார்.

மழை விடாமல் வலுவாகப் பொழிந்து கொண்டிருந்ததால் கூட்டம் 10.30 மணிக்குத் தொடங்கப் பெற்று மக்கள் உரிமைக் கழகத்தின் தலைவரும், வழக்கறிஞருமாகிய திரு. பி.வி. பக்தவத்சலம் அவர்கள் வரவேற்புரையாற்றினார்கள்.

வன்மைப்படுத்தப் பெற்றுள்ள சட்டங்கள் பற்றியும், சிறைச்சாலைகளில் புரட்சியைக் கையிலெடுத்ததற்காகச் சிறையிலடைக்கப் பெற்றவர்களுக்கு, இயல்பான கொலைக்குற்றவாளிகளுக்குக் கொடுக்கப்படுகிற சலுகைகள் கூட கொடுப்பதில்லை என்றும், தமிழகத்தில் குண்டர்களின் சட்டம் (goondas act) என 1982 - இல் கொண்டுவரப் பெற்ற கொடுமையானச் சட்டம் இன்றும் நடைமுறையில்தான் உள்ளது என்றும், பல படியாகச் சட்ட அமைப்புகளை விளக்கிக் கூறிவிட்டு, வரவேற்புரை செய்வது என்பது நடைமுறைக்காக அன்று சரியான சிந்தனைக்கும், சரியான கருத்துக்கும், சரியான திட்டத்திற்கும் இக்கூட்டமைப்பில் என்றும் வரவேற்பு உண்டு என்றும் கூறித் தம் உரையை முடித்துக் கொண்டார்.

அவரை அடுத்து உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வரும், இப்பொதுக்கூட்டத்தின் தலைவருமாகிய பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தம் தலைமையுரையில் ஒடுக்கப்படுவோர் என்ற தலைப்பு எவ்வெவற்றையெல்லாம் குறிப்பிடுகின்றன என்றும், ஒடுக்கப்படுகிற நிலை எங்கெங்கெல்லாம் உள்ளது என்பதையும், அவ்வொடுங்கும் நிலைக்கும், ஒடுக்கப்படுகிற நிலைக்கும் சாதி, மதங்களே அடிப்படைக்காரணம் என்றும் 'அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும் ஆற்றுவார் மேற்றே பொறை' - எனும் குறளுக்கு ஏற்ப இக்கூட்டமைப்பின் அருந்தொண்டை விளக்கியும் முன்னுரையாற்றினார்கள்.

தலைவரின் தலைமையுரைக்குப் பின் பெரியார் சமவுரிமைக் கழகச் சார்பில் வழக்கறிஞர் தென்னவன் அவர்களும் அறிவியக்கப் பேரவைச் சார்பில் 'அறிவியக்கம்' இதழாசிரியர் 'நாத்திக நந்தனார்' அவர்களும், தமிழக மக்கள் மறுமலர்ச்சிக் கழகத்தின் சார்பில் திரு பு. இரவிதாசன் அவர்களும், முற்போக்கு இளைஞர் அணி சார்பில் திரு. இராசேந்திரன் அவர்களும், முற்போக்கு விவசாய சங்கம் சார்பில் திரு. பழநி அவர்களும், 'முற்போக்குத் தொழிலாளர் சங்கம்' சார்பில் திரு. தமிழ்ச்செல்வன் அவர்களும், இந்திய தேசிய மக்கள் முன்னணி சார்பில் திரு. நாராயணன் அவர்களும் சுருக்கமாகவும் அதே பொழுது கருத்து விளக்கமாகவும் கூட்டமைப்பின் இன்றியமையாமை குறித்தும், ஆளுங்கட்சிகளின், ஆளும், சுரண்டல் பிரிவினரின் கொடுமைகளையும் எடுத்துக் கூறியும் ஆளும், சுரண்டல் பிரிவினரின் கொடுமைகளையும் எடுத்துக் கூறியும் தம் இயக்கம் அந்நிலைகளுக்கென எவ்வகையாலும் துணை நிற்குமென உறுதி கூறிப் பேசினர்.

இறுதியாக உ.த.மு.க. முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தம் முடிவுரையில் செறிவுற, நீண்டநேரம் விளக்கமளித்தார்கள்.

இங்குக் கூடியிருப்பார் யாவரும் தனித்தனி ஆட்கள் அல்லர் என்றும் அனைவரும் ஒவ்வோர் இயக்கம் என்றும், எனவே இவர்களை இவர்களின் உரிமைகளை அழித்துவிடலாம் என எண்ணினால் அது என்று வருக்கக அழிவைத் தேடித் தரும் என்றும் பெரும் புரட்சிக்கான அணி வகுப்புத் தொடங்கி விட்டது என்றும், தவறு செய்பவனே, சுரண்டுபவனே அஞ்சுவதில்லை குற்றமற்றவர், சுரண்டப்படுவோர் நாம் ஏன் அஞ்ச வேண்டும் என்றும், ஆங்கிலேயர் நம் நாட்டை ஆண்ட பொழுது வைத்திருந்த அதே சட்டத்தைத்தான் முன்னும், பின்னும் சில ஒட்டு வெட்டு வேலைகள் செய்து பயன்படுத்தி வருகிறது இவ்வரசு என்றும் இம் மக்களை இந்திராவின் சாம்பலைக் காட்டி அவர்களை அறிவு வகையில் சிந்தனை செய்யவிடாமல் கட்டு விலங்கு காட்டித் தந்தத்துள் மூழ்கியிருக்கச் செய்வதுமட்டு, நம் மக்களின் தலைவர்களாக இந்த 'ஆதிக்கவாதிகள்' அமர்ந்துள்ளனர் என்றும், 'கொடுங்கோன்மை' 'வெருவந்த செய்யாமை' எனும் அதிகாரங்களில் வள்ளுவர் குறிப்பிடும் அறிவுரைகளைத் தொடுத்தும் கூறியதோடு தம் முடிவுரையை ஆற்றினார்கள் அத்துடன் முற்பகல் நிகழ்ச்சி 2 மணியளவில் முடிந்தது.

பிற்பகல் நிகழ்ச்சி நான்கு மணிக்குத் தொடங்குவதற்கு முன்னர் 3-மணிக்கு மக்கள் கலாச்சாரக் கழகத்தைச் சார்ந்த அறுவர் இணைந்த குழு ஒன்று கொள்கைப்பாடல்கள் சில பாடிய பின் 'நியாயங்கள்' எனும் தலைப்பின் கீழ் நாடகம் ஒன்றை நடித்தது. அக்கால உள்ள இந்திய நாட்டின் இழிவான மக்களியல் அரசையும், ஆட்சியையும் படம் பிடித்துக் காட்டியது.

பிற்பகல் நிகழ்ச்சி 4.30 மணியளவில் தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சித் தலைவர் புலவர் கலியபெருமாள் அவர்களின் தலைமையில் தொடங்கியது. நிகழ்ச்சிக்கு வந்திருந்தோர் அனைவரையும் சொல்லாய்வறிஞரும், புதுவை உ.த.மு.க. அமைப்பாளருமான வழக்கறிஞருமாகிய திரு. அருளியார் வரவேற்றமர்ந்த பின், புலவர் கலியபெருமாள் அவர்கள் தம் முன்னுரையில், 'சிறையில் தீவிரப் பொதுவுடைமையாளர்களும், முற்போக்குச் சிந்தனையாளர்களும் இயல்பான குற்றவாளிகளைவிட இழிவாக நடத்தப்படுகிற நிலையையும், அவர்கள் துன்புறுத்தப்படுகிற நிலையையும் விளக்கிவிட்டுத் தாம் சிறைச்சாலைகளில்பட்ட இன்னல்களையும் கூறி, அண்மையில் வேலூர்ச் சிறையில் நடந்த கொடுமையை எடுத்துரைத்து இவர்களை விடுதலைசெய்யக் கோருவதாகத் தம் முன்னுரையை முடித்துக்கொண்டார்.

புலவரின் முன்னுரைக்குப் பின் மக்கள் கலாச்சாரக் கழகத்தைச் சார்ந்த திரு. சந்திரன் அவர்களும், உழைக்கும் மக்கள் மாமன்றத்தைச் சார்ந்த திரு. முத்து அவர்களும், உரிமை மீட்புக் கூட்டமைப்பின் பணிகளை மிகவும் பாராட்டிக் கூறிவிட்டு, இந்நாட்டில் பொதுவுடைமை வரக்கூடாது என்றே இந்நாட்டுப் பொதுவுடைமையாளர்கள் தேவையற்ற இறக்குமதிச் சரக்கால் சிந்திக்கின்றனர், செயல்படுகின்றனர் என்று அதன் இன்றியமையாமையையும் விளக்கியபின்னர், குசராத் தேசிய இனத்தின் முற்போக்குச் சிந்தனையாளர் திரு அச்யுத் யக்னிக் ஆங்கிலத்திலே 'மார்க்சியம் இன்று' இதழாசிரியரும் சிறந்த முற்போக்குச் சிந்தனையாளருமாகிய திரு க. மனோகரன் அதைத் தமிழில் மொழிபெயர்த்தார்.

தொடரும்

2-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி

போதுள்ள நிலையைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டால் நாளை நம் பிறங்கடைகள் தமிழீழத்தில் நம் அடிமை வரலாற்றைப் படித்து எள்ளி நகைப்பாடுவர் என்பதை இந்தத் தலைமைகள் உணர வேண்டும்.

இனியாவது தங்களுக்குள் உள்ள பூசலை மறந்து திரு. கருணாநிதி, பாவலரேறு போன்ற தமிழின நாடும் தலைவர்கள் ஒன்றுபடுவார்களாக.

திராவிட இயக்கங்களும் கொண்ட திசையிலேயே நடைபெறுவனவாகுக!

– மெய் அருள்மொழியன்.

5-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி

பி. குமார் உ.த.மு.க நெல்லை., இரவிச்சந்திரன் உ.த.மு.க நெல்லை., ஆகியோர் வருகை தந்து கருத்துகளை வழங்கினர் இறுதியில்,

"இந்திராவின் சாப்பல் தொடர்பான வழக்கில் வழக்காடிய உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு அவர்களைக் கொலை செய்துவிடுவதாக மிரட்டிய அரைநக்கர்கள்-காட்டுவிலங்காண்டிக் கொலைவெறியர்களாகிய அவ் வழக்குரைஞர்களைக் கண்டிக்கிறோம். ஆள்வோரின் இத்தகைய கொலை மிரட்டல்கள் அச்சுறுத்தல்கள் மூலம், குடியாட்சியரசில் ஒரு குடிமகன் நயன்மை வேண்டி வழக்குமன்றம் செல்வதற்கு உரிமையும் பாதுகாப்பும் மறுக்கப்படுமானால், எதிர்காலத்தில் மக்கள் கிளர்ந்தெழுந்து ஆள்வோரின் கைக்கூலிப் பட்டாளங்களின் கொட்டாரங்களாகிய வழக்குமன்றங்கள் காவல் நிலையங்களைத் தகர்த்தெறிவரென எச்சரிக்கிறோம்" - இவ்வாறு தீர்மானம் நிறைவேறிய பின்னர், அன்று இரவு 8.00 மணியளவில் "தென்மொழி இலக்கியக் கழக'த்தின் தொடக்கவிழா அமைப்புக் கூட்டம் முடிவடைந்தது.

அடுத்தகூட்டம் 6.1.1985-இல் நடைபெறுமென்றும், இடமும் நேரமும் தனித்தனியே மடல்வழி தெரிவிக்கப் பெறுமென்றும் அமைப்பாளர் அறிவித்தனர்.


சொல்லாய்வறிஞர் ப. அருளி அவர்களின்

தமிழ் வளர்ச்சிக்கு ஒரு புத்தாக்க நூல்!

**இவை தமிழல்ல**

(அயற்சொல் அகராதி

விலை: 10-00; அஞ்சல் செலவு: 1-00;


**உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்:**

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை - இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுகளும் மாந்தவியல் சிறப்புகளும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.


கழக அருளாளர்: தென்மொழி நா. இளமாறன்

கழக அருட்கொடையாளர்கள்.

தென்மொழி ந. முத்துக்குமரன், பல்லடம் மா. ஆறுமுகம்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவு எண்: TN/MS C)/657

அனுப்புதல்: **தமிழ் நிலம்**
5. அருணாசலத் தெரு.
திருவல்லிக்கேணி,
சென்னை — 5

பெறுநர் திரு/திருவாட்டி

நூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.